


**20.02.2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. விமானிகளுக்கான மின்னணு உரிம முறையை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு புதுதில்லியில் இன்று அறிமுகம் செய்தார்.

2. டெல்லி முதலமைச்சராக பிஜேபியின் திருமதி ரேகா குப்தா இன்று பதவி ஏற்றார்.

3. **Samagra Shiksha** திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை தமிழகத்திற்கு உடனடியாக விடுவிக்க பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

4. தமிழ்நாட்டில் இம்மாத இறுதிக்குள் மருத்துவ துறையின் அனைத்து காலிப்பணியிடங்களும் நிரப்பப்படும் என்று அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

5. ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று பங்களாதேஷை எதிர்கொள்கிறது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

**********

<u>ராம்மோகன் நாயுடு</u>

விமானிகளுக்கான மின்னணு ஊழியர் உரிம முறையை மத்திய சிவில் விமான போக்குவரத்து துறை அமைச்சர் திரு.ராம்மோகன் நாயுடு புதுதில்லியில் இன்று அறிமுகம் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் விமானிகள் எளிதாக உரிமம் பெற இந்த புதிய முறை பெரிதும் பயனளிக்கும் என்றார்.

இந்நவீன முறையை அறிமுகம் செய்யும் இரண்டாவது நாடாக இந்தியா திகழ்வதாக எடுத்துரைத்த அவர், மின்னணு வளர்ச்சியில் இது ஒரு புதிய மைல்கல் என்றார்.

விமான போக்குவரத்து, விமான நிலையங்கள், இயக்கம், ஒழுங்குமுறை உள்ளிட்ட அனைத்து அம்சங்களையும் அமைச்சகம் ஒருங்கிணைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

விமான போக்குவரத்து துறையில் விரைவான வளர்ச்சி கண்டுவரும் நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று திரு.ராம்மோகன் நாயுடு தெரிவித்தார்.

**********

<u>டெல்லி முதலமைச்சர்</u>

டெல்லி முதலமைச்சராக பிஜேபியின் திருமதி ரேகா குப்தா இன்று பதவி ஏற்றார்.

ராம்லீலா மைதானத்தில் நடைபெற்ற பதவி ஏற்பு நிகழ்ச்சியில் டெல்லி துணை நிலை ஆளுநர் திரு.வி.கே.சக்ஸேனா அவருக்கு பதவி பிரமாணமும், ரகசிய காப்பு பிரமாணமும் செய்துவைத்தார்.

ரேகா குப்தாவுடன் 6 அமைச்சர்களும், பதவி ஏற்றுக்கொண்டனர்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா திரு.ராஜ்நாத்சிங் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

டெல்லியின் 4ஆவது பெண் முதலமைச்சரான திருமதி ரேகா குப்தா, பிஜேபி சார்பிலான 2ஆவது பெண் முதலமைச்சராவார்.

**********

<u>பிரதமர்</u>

பிரதமர் திரு.நரேந்திரமோடி **SOUL** தலைமைத்துவ பண்பு மாநாட்டின் முதலாவது பதிப்பை புதுதில்லியில் நாளை தொடங்கிவைக்கிறார்.

பூடான் பிரதமர் தாஷோ ஷெரிங் டோப்கே சிறப்பு விருந்தினராக பங்கேற்கும் இந்த இரண்டு நாள் மாநாட்டில் அரசியல், விளையாட்டு, கலை, ஊடகம் ஆன்மீகம் உள்ளிட்ட துறைகளை சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்க உள்ளனர்.

**********

<u>ஜெய்சங்கர்</u>

தென்னாப்பிரிக்காவின் ஜோஹன்னஸ்பர்க்கில் ஜி-20 வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்பதற்காக மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் இன்று அங்கு செல்கிறார்.

இந்நிகழ்வின் மூலம் ஜி-20 நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவு வலுப்பெறுவதோடு, தென்னாடுகளின் குரலை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பு ஏற்படும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**********

முதலமைச்சர் கடிதம்

தமிழ்நாட்டில் மாணவர்கள் மற்றும் ஆசிரியர் நலன் கருதி **Samagra Shiksha** திட்டத்தின் கீழ் 2 ஆயிரத்து 152 கோடி ரூபாய் நிதியை உடனடியாக விடுவிக்க பிரதமர் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கோரியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடிக்கு இன்று அவர் எழுதிய கடிதத்தில், புதிய தேசிய கல்வி கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விதிகள் குறித்து தமிழக அரசின் கவலைகள் முறையாக தெரிவிக்கப்பட்டுள்ளதாக எடுத்துரைத்தார்.

ஷமக்ர ஷிக்ஷா திட்டத்தையும், தேசிய கல்வி கொள்கை செயலாக்கத்தையும் பொருத்தி பார்க்காமல், இந்த திட்டத்திற்கான நிதியை விடுவிக்க வலியுறுத்தியுள்ளார்.

நிதி விடுவிக்கப்படாததால் கல்வி தொடர்பான நல திட்டங்கள் மாநிலத்தில் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறிய முதலமைச்சர் எனவே இவ்விஷயத்தில் பிரதமர் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளார்.

தமிழ்நாட்டில் செங்கல்பட்டு திருவண்ணாமலை மாவட்டங்களில் ஆயிரத்து 141 கோடி ரூபாய் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட சாலை பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கிவைத்தார்.

சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி மூலம் இதனை தொடங்கிவைத்த முதலமைச்சர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகழகத்தின் சார்பில் 92 கோடியே 45 லட்ச ரூபாய் செலவிலான திட்ட பணிகளையும் திறந்துவைத்தார்.

மேலும் ஆறாயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 6 கூடுதல் வட்ட செயல்முறை கிடங்குகளுக்கும் முதலமைச்சர் அடிக்கல் நாட்டியுள்ளார்.

கடலூர் மாவட்டம் மஞ்சக்குப்பத்தில் நாளை புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி முடிவுற்ற திட்ட பணிகளையும் முதலமைச்சர் தொடங்கிவைக்கிறார்.

புயல் சேதங்களால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 209 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலதிட்ட உதவிகளையும் அவர் வழங்குகிறார்.

**********

மீனவர்கள்

எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி ராமேஸ்வரத்தை சேர்ந்த 10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

இவர்களின் 3 விசை படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மன்னார் வளைகுடா பகுதியில் நேற்றிரவு விசைபடகில் மீன்பிடித்து கொண்டிருந்த 4 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, தலைமன்னார் கடற்படை முகாமின் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில், இன்று அதிகாலை மீண்டும் 6 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இந்த 6 பேரும் நெடுந்தீவு கடற்பரப்பில் 2 விசைபடகுகளில் மீன்பிடித்துகொண்டிருந்த போது இலங்கை கடற்படையினர் இவர்களை கைது செய்து மயிலட்டி மீன்பிடி துறைமுகத்தில் ஒப்படைத்தனர்.

10 மீனவர்கள் அடுத்தடுத்து கைது செய்யப்பட்டிருப்பது ராமேஸ்வரம் பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

**********

## திருச்சி NIT

சர்வதேச அளவிலான தொழில்நுட்ப மேலாண்மை திருவிழா திருச்சி தேசிய தொழில்நுட்ப கல்வி கழகத்தில் இன்று காலை தொடங்கியது.

பிரக்யான் என்று அழைக்கப்படும் இந்த நான்கு நாள் விழா இளையோரிடையே படைப்பாற்றல் திறனையும், திறன் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் நோக்கத்துடன் நடைபெறுகிறது.

இந்தியா மட்டுமல்லாமல் சர்வதேச நாடுகளிலிருந்தும் மாணாக்கர் இதில் பங்கேற்று தத்தம் தொழில்நுட்ப திறன்களையும், படைப்பாற்றல் திறன்களையும் வெளிப்படுத்துகின்றனர்.

பயிலரங்குகள், ஹேக்கத்தான், கண்காட்சிகள் உள்ளிட்டவைக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**********

## மா.சுப்பிரமணியன்

தமிழ்நாட்டில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 2 ஆயிரத்து 642 புதிய மருத்துவர்கள் பட்டியலை மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் இன்று சென்னையில் வெளியிட்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இம்மாத இறுதிக்குள் மருத்துவ துறையில் அனைத்து காலிப்பணியிடங்களும் நிரப்பப்படும் என்று தெரிவித்துள்ளார்.

மருத்துவ துறையின் பல்வேறு பிரிவுகளில் 4 ஆயிரத்து 615 பணியிடங்களுக்கான தேர்வுகள் நடைபெற்று வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

வாய்ஸ்

முன்னதாக ஆயிரத்து 127 மருத்துவர்களுக்கு கலந்தாய்வின் மூலம் பணியிடை மாறுதலுக்கான ஆணைகளை அமைச்சர் வழங்கினார்.

**********

## கே.என்.நேரு

கோவை காந்திபுரத்தில் 3 கோடியே 60 லட்ச ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள ஆம்னி பேருந்து நிலையத்தை மாநில அமைச்சர்கள் திரு.கே.என்.நேரு, திரு.செந்தில்பாலாஜி, திரு.சாமிநாதன் ஆகியோர் இன்று திறந்துவைத்தனர்.

இந்நிகழ்ச்சியில் கோவை, நீலகிரி, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களுக்குட்பட்ட நகராட்சி பகுதிகளில் 30 கோடியே 72 லட்ச ரூபாய் மதிப்பில் முடிவுற்ற 15 புதிய திட்ட பணிகள் திறக்கப்பட்டன.

271 கோடி ரூபாய் மதிப்பில் ஆயிரத்து 28 புதிய திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

**********

<u>திருச்சி தென்னை</u>

திருச்சியில் தென்னை சாகுபடி தொழில்நுட்ப கருத்தரங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.பிரதீப்குமார் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய அவர் தென்னையின் அனைத்து பகுதிகளும் பொருளாதார ரீதியாக விவசாயிகளுக்கு பயன்படுவதாக கூறினார்.

வாய்ஸ்

**********

<u>இருவரி</u>

தூத்துக்குடி மாவட்டத்தில் ஸ்டெர்லைட் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றுகூடி போராட்டங்கள் நடத்த அனுமதி இல்லை என்று மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு.ஆல்பர்ட் ஜான் தெரிவித்துள்ளார்.

உத்தரவை மீறுவோர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் கால்நடைகளுக்கான இலவச கன்றுவீச்சு நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கி அடுத்த மாதம் 19ஆம் தேதிவரை நடைபெறுகிறது.

நாமக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் நாளை நடைபெறும்.

புதுக்கோட்டை மாவட்ட வேலை வாய்ப்பு தொழில்நெறி வழிகாட்டு மையத்தில் தனியார்துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை நடைபெறுகிறது.

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வேளாண் உழவர் நலத்துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களை ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் இன்று ஆய்வு செய்தார்.

காஞ்சிபுரத்தில் நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நாளை மறுநாள் நடைபெறும்.

**********

<u>டேங்கர் லாரி விபத்து</u>

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அருகே டீசல் ஏற்றிவந்த டேங்கர் லாரி இன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 5 ஆயிரம் லிட்டருக்கும் மேற்பட்ட டீசல் சாலையில் கொட்டியதால் வாகனங்கள் மாற்றுபாதையில் இயக்கப்படுகின்றன.

சீரமைப்பு பணிகளை காவல் மற்றும் தீயணைப்புத்துறையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

**********

<u>எருது</u>

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இன்று நடைபெற்ற எருதுவிடும் விழாவில் பர்கூர், கிருஷ்ணகிரி, காவேரிபட்டிணம் கர்நாடகம் ஆந்திர மாநிலங்களிலிருந்து 300க்கும் மேற்பட்ட காளைகள் களமிறங்கியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

**********

<u>கொடைக்கானல்</u>

கொடைக்கானலில் கோடை மலர் கண்காட்சிக்கான மலர் நாற்று நடவுப்பணிகள் தொடங்கியுள்ளன.

**********

<u>கிரிக்கெட்</u>

துபாயில் ஐ.சி.சி. சாம்பியன் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இந்தியா தனது முதல் ஆட்டத்தில் பங்களாதேஷை இன்று பிற்பகல் இரண்டரை மணிக்கு எதிர்கொள்கிறது.

2013ஆம் ஆண்டிற்கு பின்னர் இந்தியா ஐ.சி.சி. சேம்பியன் கோப்பையை மீண்டும் வெல்லும் முனைப்புடன் களமிறங்குகிறது.

வரும் 23ஆம் தேதி இந்தியா – பாகிஸ்தானுடன் மோதுகிறது.

**********

<u>டென்னிஸ்</u>

கத்தார் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரோஹன் போபன்னா, போர்ச்சுகலின் நூனோ இணை - இங்கிலாந்து இணையை இன்றுமாலை எதிர்கொள்கிறது.

மற்றொரு காலிறுதியில் இந்தியாவின் யூக்கி பாம்ப்ரி, குரேசியாவின் இவான் இணை – குரேசியா சால்வடார் இணையுடன் மோதுகிறது.

**********